<tr><td>1</td><td>Hi-Tech Tronics<br>தியாகராய நகர்<br>சென்னை-42</td><td rowspan="2">2.80</td><td>0.09 % குறைவு</td></tr>
<tr><td>2</td><td>ஸ்ரீ பாலாஜி எலக்ட்ரிக்கல்ஸ்<br>சென்னை-17</td><td>0.79 % அதிகம்</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு<br>
1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள Hi-Tech Tronics, சென்னை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
2. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
(கோப்பு எண்.இ1/7373/2022)
</td>
<td>தீர்மானம் எண். 87<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>34</td>
<td>
திருவண்ணாமலை நகராட்சியில் வார்டு எண்.25,26 பகுதிகளுக்கு சமுத்திரம் ஏரியின் கீழ் பகுதியில் நீராதாரத்திலிருந்து குடிநீர் எடுக்கப்பட்டு கிணற்றில் சேகரிக்கப்பட்டு 50HP மோட்டார் கொண்டு சோமவாரக்குளம் நீர்உந்து நிலையத்திற்கும் 35HP (1+1) கொண்டு பெரும்பாக்கம் சாலைக்கும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.<br><br>
இந்நிலையில் 50HP மோட்டார் கடந்த 29.12.2022 சரிவர இயங்காமல் Winding Coil பழுது ஏற்பட்டுள்ளது. மேலும், 35HP மோட்டாரைக் கொண்டு 24 மணி நேரமும் இயக்கப்பட்டு வருகிறது. அனைத்து மோட்டார்களும் பழுது நீக்கம் செய்து தயார் நிலையில் வைத்திட ஏதுவாக அடுத்த ஓராண்டிற்கு<br>
Winding Coil மற்றும் பராமரிப்பு செய்தல் - 50HP = Rs. 70,000/-<br>
Winding Coil மற்றும் பராமரிப்பு செய்தல் - 35HPx2 = Rs.1,10,000/-<br>
----------<br>
Rs.1,80,000/-<br>
----------
</td>
<td>தீர்மானம் எண். 88<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | ரூ.1,80,000/- உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்கு குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. குடிநீர் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண். 9457 /2022 /இ2) | |
| **35** | திருவண்ணமலை நகராட்சியில் மூன்று குடிநீர் திட்டங்களில் ஏற்படும் உடைப்பு மற்றும் எதிர்பாரத நிகழ்வுகளால் குடிநீர் கசிவு ஏற்படுவது தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் உலகலாப்பாடி தலைமை நீரேற்று நிலையம் முதல் நகராட்சி அண்ணாநகர் பூஸ்டர் வரை 25 க்கும் மேற்பட்ட இடங்களில் உள்ள Air Valve களில் 15 க்கும் மேற்பட்டவை பழுதடைந்துள்ளதாலும், நெடுஞ்சாலைத் துறை சாலை விரிவாக்கத்தினால் தற்போது 27 இடங்களில் இரண்டாவது குடிநீர் திட்டத்தில் உடைப்பு ஏற்படுவதாலும், தற்போது இரண்டாவது குடிநீர் திட்டத்தில் உத்தேசமாக 50HP நீர் (5MLD) வெளியேறி செல்வதால் நகராட்சிப் பகுதியில் நிறைவாக குடிநீர் வழங்குவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதால், குடிநீர் பணியின் அவசியத்தை கருத்திற் கொண்டு,<br>1. புதியதாக 9Gate Valve + 9 Kinetic Air Valve பொருத்துதல் – Rs.9.80 lakh<br>2. 27 இடங்களில் Pumping Main Leak attend செய்தல் – Rs.5.00 lakh<br>மேற்காணும் பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளை மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக்கு குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. குடிநீர் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ளலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண். 0574 /2023/இ1) | தீர்மானம் எண். 89<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **36** | சென்னை நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் மே.கு.எண்.10936/எம்ஏ-2/2022 நாள் 25.01.2023 உடன் வரப்பெற்ற, நகராட்சிகளின் நிலைகளுக்கேற்ப பணியிடங்களுக்கான வரையறை நிர்ணயம் செய்து அதற்கேற்ப புதிய பணியிடங்களை தோற்றுவித்தல் மற்றும் ஏற்கனவே உள்ள பணியிடங்களை வரைமுறைப்படுத்தி வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.10 நகராட்சி | தீர்மானம் எண். 90<br>பதிவு செய்யப்பட்டது |

| | | |
|---|---|---|
| | நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப–1) துறை நாள் 23.01.2023 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு – பதிவு செய்யலாம்<br>ந.க.எண்.9987/2022/சி1 | |
| **37** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழக சட்டப்பேரவையில் விதி எண்.110 இன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பு நாள் 07.05.2022ன்படியும், சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரின் காணொலி ஆய்வுக் கூட்டம் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் ந.க.எண்.6082/2022/ச.உ.தி–2 நாள் 14.07.2022ல் தெரிவித்துள்ளவாறு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டத்தின் கீழ் அரசு துவக்கப் பள்ளி (1 முதல் 5 ஆம் வகுப்பு வரை) மாணவர்களுக்கு அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் காலை சிற்றுண்டி வழங்கப்பட்டுவருகிறது.<br>மேலும், அரசாணை (நிலை) எண்.1 சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை நாள் 13.01.2023 ன்படி திருவண்ணாமலை நகராட்சியில் கூடுதலாக 4 எண்ணிக்கை நகராட்சி நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் 823 மாணவ / மாணவியர்களுக்கு காலை சிற்றுண்டி தயாரித்து வழங்கிட 10.02.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | தீர்மானம் எண். **91**<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் |
|---|---|---|
| 1 | ஜெயம் மகளிர் சுய உதவிக் குழு<br>கூட்டமைப்பு – வார்டு–31, 33<br>மாரியம்மன் கோவில் தெரு<br>திருவண்ணாமலை | 1 குழந்தைக்கு<br>ரூ.12.70 |
| 2 | சூர்யா நகர் பகுதி அளவிலான கூட்டமைப்பு<br>வார்டு எண்.31, 33 சூர்யா நகர்<br>திருவண்ணாமலை. | 1 குழந்தைக்கு<br>ரூ.15.00 |

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. வரிசை எண்.1ல் கண்டுள்ள ஜெயம் மகளிர் சுய உதவிக் குழு, திருவண்ணாமலை என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம். நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கலாம் மன்றம் அனுமதிக்கலாம்.

<table>
<tr>
<td>38</td>
<td>மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை அவர்களின் 11.07.2021 ஆம் தேதிய கள ஆய்வில், திருவண்ணாமலை நகரம் போளூர் சாலை வார்டு எண். 4, பிளாக் எண்.4 மற்றும் நகரளவு எண்.9212ல் 2.5 ஏக்கர் இடமானது வருவாய் துறைக்கு சொந்தமான மயான இடமாகும். இவ்விடமானது தற்காலிக ஆக்கிரமிப்புகளாக உள்ளது. இதனை வருவாய் துறை மூலம் நகராட்சி நிர்வாகம் ஆக்கிரமிப்பு அகற்றுமாறு தெரிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து ஆக்கிரமிப்புகளும் அகற்றப்பட்டது.<br>
மேற்படி, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவண்ணாமலை அவர்களின் செயல்முறை ந.க.எண். அ6/3448/2019 நாள் 15.07.2021 ஆம் தேதி மதிப்பீடு ரூ.3.60 இலட்சத்தில் மேற்கண்ட இடத்தில் பாதுகாப்பு நடவடிக்கைக்காக சுற்றி கம்பிவேலி அமைக்க கூட்டாண்மை சமூக பொறுப்பு நிதியிலிருந்து 2019–2020 ஆம் நிதியாண்டிற்கு (CSR) திட்டத்தின் கீழ் ரூ.3,60,000/–ஐ நகராட்சிக்கு வங்கி வரைவோலையாக விடுவித்து உத்தரவிடப்பட்டுள்ளது.<br>
இந்நிலையில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவண்ணாமலை அவர்களின் கடித ந.க.எண்அ6/3448/2019 நாள் 23.06.2022ஆம் தேதிய கடிதத்தில் மேற்கண்ட பணிக்கு விடுவிக்கப்பட்டுள்ள தொகையினை மாவட்ட ஆட்சியரால் நிறுத்தம் செய்து, இதற்க்கான பட்டியல் தொகையினை திருவண்ணாமலை நகராட்சி ஆணையாளர், பொது நிதியிலிருந்து வழங்கிடுமாறு தெரிவித்துள்ளதன்பேரில், இந்நகராட்சி பொது நிதியிலிருந்து பட்டியல் தொகை ரூ.3.60 இலட்சத்தினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலக்கு குறிப்பு:<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண். 1982/2021/இ1)</td>
<td>தீர்மானம் எண். 92<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>39</td>
<td>மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை அவர்களின் கடிதம் ந.க.டி3/34643/2021 நாள் 28.10.2022ன்படி தூய்மைப் பணியாளர்கள் அமர்ந்து இளைப்பாறவும், மதிய வேளைகளில் உணவருந்தவும், நீர்ப்பருகவும் போதி வசதிகளை ஏற்படுத்தி தரும் பொருட்டு நகராட்சி புதிய அலுவலக வளாகத்தில் புதியதாக கட்டிடம் கட்டுவதற்கு 24.02.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>ஒப்பந்த்தாரரின் பெயர்</th><th>மதிப்பீடு<br>(ரூ.இலட்சத்தில்)</th><th>கொடுத்துள்ள<br>ஒப்பந்தப்புள்ளி</th></tr>
<tr><td>1</td><td>திரு.P.ஐயப்பன், தேனிமலை<br>திருவண்ணாமலை.</td><td rowspan="2">14.20</td><td>0.03 % குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.P.சேகர், பண்டிதபட்டு<br>கிராமம்,திருவண்ணாமலை.</td><td>0.21 % அதிகம்</td></tr>
</table></td>
<td>தீர்மானம் எண். 93<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>அலுவலகக் குறிப்பு :<br>1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண்.1 கண்டுள்ள திரு.P.ஐயப்பன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகரமன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண். 9959 /2022 /இ1)</td>
<td></td>
</tr>
<tr>
<td>40</td>
<td>திருவண்ணாமலை நகராட்சியில் அம்ரூத்–2.0 – அடல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டம் 2.0 யின் கீழ் அரசாணை எண்.7 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA2) துறை நாள் 20.01.2023–ல் திருவண்ணாமலை நகராட்சியின் செட்டிக்குளம் மற்றும் சிம்மதீர்த்தம் குளத்தினை புனரமைப்பு செய்ய மதிப்பீடு ரூ.92.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.26467/2021/AMRUT–1 நாள் 30.01.2023 அன்று கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளதை தொடர்ந்து, வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>ஒப்பந்த்தாரரின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்)</th><th>கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">இந்நகராட்சியின் வார்டு எண்–4, சர்வே எண்–96, போளூர் சாலையிலுள்ள செட்டிக் குளத்தினை மேம்படுத்தும் பணி</td><td>M/s. Surya Construction திருவண்ணாமலை</td><td rowspan="2">53.00</td><td>0.02 % குறைவு</td></tr>
<tr><td>M/s. IRC Construction திருவண்ணாமலை</td><td>0.36 % அதிகம்</td></tr>
<tr><td rowspan="2">2</td><td rowspan="2">இந்நகராட்சியின் வார்டு எண்–3, சர்வே எண்–536, செங்கம் சாலையில் உள்ள சிம்ம தீர்த்தம் குளத்தினை மேம்படுத்தும் பணி</td><td>M/s. Linga Construction திருவண்ணாமலை</td><td rowspan="2">39.00</td><td>0.02 % குறைவு</td></tr>
<tr><td>M/s. APU Construction திருவண்ணாமலை</td><td>0.56 % அதிகம்</td></tr>
</table>
</td>
<td>தீர்மானம் எண். 94<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு :**<br>1. குறைந்த ஒப்பந்தப்புள்ளி**களை** கொடுத்துள்ள வரிசை எண்.**1ல்** M/s. Surya Construction, திருவண்ணாமலை மற்றும் வரிசை எண்.2ல் M/s. Linga Construction திருவண்ணாமலை என்ற நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் ஏற்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகரமன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண். 1711 /2022 /இ1) | |
| **41** | திருவண்ணாமலை நகரம் முத்து விநாயகர் கோவில் தெருவில் அமைந்துள்ள நகராட்சி ஆணையாளரின் அதிகாரப்பூர்வ குடியிருப்பில் கீழ்க்கண்ட மராமத்து பணிகள் மேற்கொள்ள<br>1. சேதமடைந்த மேற்கூரையை சரி செய்து மழைநீர் கசிவு ஏற்படாமல் நல்ல நிலையில் பராமரித்தல் பழுதடைந்த அனைத்து வகை மின்சாதனங்களையும் பழுது நீக்கம் செய்து நல்ல நிலையில் இருப்பதை உறுதி செய்தல்<br>2. குடியிருப்பில் உள்ள 50 ஆண்டுகளுக்கு முன் பொருத்தப்பட்ட கதவு ஜன்னல் உள்ளிட்ட மர வேலைகளை எளிதில் பயன்படுத்தக்கவாறு மராமத்து பணிகள் மேற்கொண்டு பராமரிப்பு செய்தல். ஒட்டு மொத்த கட்டுமானத்திற்க வர்ணம் பூசி (Colour Washing) புதுப்பித்தல்<br>தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5.40 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**<br>(அ) கடந்த மாதங்களில் பெய்த கனமழையின் காரணமாக 50 ஆண்டுகளுக்கு முற்பட்ட கட்டுமானம் என்பதால் குடியிருப்பின் மேற்கூரையில் மழைநீர் தேங்கியதன் காரணமாக பல இடங்களில் கசிவு ஏற்பட்டதோடு இரண்டு அறைகளின் மேற்கூரை பெயர்ந்து விழுந்து விட்டது. ஆகவே குடியிருப்போர்களின் பாதுகாப்பு கருதி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது.<br>(ஆ) திருவண்ணாமலை நகராட்சி ஆணையாளரின் அதிகாரப்பூர்வ குடியிருப்பு 50 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட பழமையான கட்டிடம் மேற்சொன்ன கட்டுமானத்தில் காலமுறையில் மேற்கூரை மற்றும் வெளிப்புறங்களில் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. இவ்வாறு காலமுறையில் மராமத்து பணிகள் மேற்கொள்ளாமல் இருப்பதால் தற்போது கட்டிடம் மற்றும் கதவு ஜன்னல்கள் பயன்படுத்தக்கவாறு இல்லாத காரணத்தால் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டிற்கும் அதனடிப்படையில் உரிய விதிகளை பின்பற்றி பணிகளை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண். 95<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| **42** | திருவண்ணாமலை நகரம் முத்து விநாயகர் கோவில் தெருவில் அமைந்துள்ள நகராட்சி ஆணையாளரின் அதிகாரப்பூர்வ குடியிருப்பு வளாகத்தில் அலுவலக பணிகள் மேற்கொள்ள வாகனம் நிறுத்துமிடத்தில் சிறு தடுப்பு ஒன்றை ஏற்படுத்தி அறையாக மாற்றம் செய்து அதில் மேஜை நாற்காலி கணினி உள்ளிட்ட வசதிகளை எற்படுத்தி கொடுக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 2.56 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**<br>பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண். 96 அனுமதிக்கப்பட்டது |
| **43** | திருவண்ணாமலை நகரம், வார்டு எண்.4, பிளாக் எண்.10 நகரளவு எண்.362/8,10,11,12,15,17,19,20–ல் 2.32 ஏக்கர் பரப்பினை JBA நகர் குடியிருப்பு மனைப்பிரிவு அமைப்பதற்காக திருவண்ணாமலை நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரின் ந.க.எண்.SH8HQS80/2022/TCP நாள் 05.01.2023ல் இணையதளம் வழியாக, ஒற்றை சாளர முறையில் நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநரிடமிருந்து தொழில்நுட்ப அனுமதி (அனுமதி எண்.SWP/DTCP/TVMALAI District Layout No.07/2023) பெற்று, இதன் உரிமையாளர் JBA மெட்டல் கம்பெனி, நெ.56D முகல்புறாத் தெரு திருவண்ணாமலை அவர்களால் 18.01.2023ல் நகராட்சியின் இறுதி ஒப்புதல் வேண்டி விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது.<br>தொடர் நடவடிக்கையாக நகராட்சி பொறியாளர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோரிடம் இவ்வலுவலக ந.க.எண்.251/2023/எப்2 நாள் 03.02.2023ன் மூலம் திருவண்ணாமலை நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரின் தொழில்நுட்ப அனுமதியில் உள்ள நிபந்தனைகளை கூராய்வு செய்து அறிக்கை வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டது.<br>நகராட்சிப் பொறியாளர், நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோர்கள் 06.02.2023ல் சமர்ப்பித்த அறிக்கைகளின் அடிப்படையில் JBA நகர் மனைப்பிரிவு உரிமையாளருக்கு இவ்வலுவலக ந.க.எண்.251/2023/எப்2 நாள் 08.02.2023ல் கீழ்க்கண்ட அறிவிப்பு சார்வு செய்யப்பட்டது.<br>1. JBA நகர் மனைப்பிரிவுக்காக தான ஆவணம் 5603/2022 ன் மூலம் நகராட்சி ஆணையாளருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகள் மூலை முடக்குடன் மற்றும் பொது உபயோக இடங்களை உட்பிரிவு செய்து பட்டா மாற்றம் செய்து வருவாய் துறை ஆவணங்களை ஒப்படைக்க அறிவுறுத்தப்பட்டது.<br>2. JBA நகர் மனைப்பிரிவுக்காக சாலைகள், மழைநீர் வடிகால்வாய், சிறுபாலங்கள், தெருவிளக்கு வசதி, ஆகிய அடிப்படை வசதிகள் மேற்கொள்ள, நகராட்சி பொறியாளர் மதிப்பீட்டின்படி ரூ.66.25 லட்சம் நகராட்சி கருவூலத்தில் செலுத்த அறிவுறுத்தப்பட்டது.<br>3. JBA நகர் மனைப்பிரிவுக்காக, நகராட்சி பொறியாளரின் அறிக்கையில் குறிப்பிட்டபடி 10 | தீர்மானம் எண். 97 அனுமதிக்கப்பட்டது |

மின்கம்பங்கள் அமைக்க தமிழ்நாடு மின்வாரியத்தில் கேட்பு பெற்று, அத்தொகையை செலுத்தி அதன் ரசீதை ஒப்படைக்க அறிவுறுத்தப்பட்டது.

4. JBA நகர் மனைப்பிரிவுக்காக, தனியார் நிலத்தை மனைகளாகவும், தெருக்களாகவும் பிரிக்க கட்டணம் ரூ.7500/– 63 மனைகளுக்கு கூராய்வு கட்டணமாக ரூ.63,000/– 63 மனைகளுக்கு உட்பிரிவு கட்டணமாக ரூ.31500/– தொழிலாளர் நல நிதிக்காக பொறியாளர் மதிப்பீட்டின்படி ரூ.54130/– ஆக மொத்தம் ரூ.156130/– ஐ நகராட்சி கருவூலத்தில் செலுத்த அறிவுறுத்தப்பட்டது.

JBA நகர் மனைப்பிரிவு உரிமையாளரால் 09.02.2023 நாளிட்ட மனுவில், இவ்வலுவலக அறிவிப்பு கடிதம் ந.க.எண்.251 / 2023 / எப்2 நாள் 08.02.2023ல் அறிவுறுத்தப்பட்ட அடிப்படை வசதிகள் பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.66.25 லட்சத்தை செலுத்துவதற்கு பதிலாக, அரசாணை நிலை எண்.141 (வீட்டுவசதி) நாள் 16.07.2022ல் உத்தரவிடப்பட்டுள்ளவாறு அடிப்படை வசதிகளை மனுதாரரின் நிறுவனத்தால் மேற்கொள்ள அனுமதி கோரப்பட்டது.

மனுதாரரின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு அரசாணை நிலை எண். 141 (வீட்டுவசதி) நாள் 16.07.2022ல் உத்திரவிடப்பட்டுள்ளவாறு கீழ்க்கண்ட நிபந்தனையுடன் இவ்வலுவலக ந.க.எண். 251/2023/எப்2 நாள் 15.02.2023ல் அனுமதி வழங்கப்பட்டது.

1. நகராட்சிப் பொறியாளரால் வழங்கப்பட்ட விரிவான மதிப்பீட்டின்படி, பொறியாளரை அணுகி ஆலோசனைகள் பெற்று நகராட்சி பொறியியல் பிரிவின் வழிகாட்டுதல்களின்படி பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.
2. JBA நகர் மனைப்பிரிவில் 60% மனைகள் விற்கும் வரையிலோ அல்லது தொடர்ந்து ஐந்து ஆண்டு காலம் வரையிலோ, இதில் எது பின்னால் வருகிறதோ அதுவரை பராமரிப்புப் பணிகளை தங்கள் நிறுவனமே மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தி அனுமதி வழங்கப்பட்டது.

JBA நகர் உரிமையாளரால், அவரது 08.03.2023 நாளிட்ட கடிதம் மூலம் கீழ்க்கண்ட ஆவணங்கள் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டது.

1. JBA நகர் மனைப்பிரிவிற்காக தான ஆவணம் 5603 / 2022ன் மூலம் நகராட்சி ஆணையருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகள் மூலை முடக்குடன் 2898 ச.மீ. பொது உபயோக இடம் TNEB 46.79 ச.மீ. நகராட்சி இடம் 46.11 ச.மீ ஆகிய இடங்களை உட்பிரிவு செய்து நகராட்சி ஆணையாளர் பெயரில் பட்டா மாற்றம் செய்து வருவாய் வட்டாட்சியரின் 08.03.2023ம் நாளிட்ட ஆவணங்கள் அசலாக ஒப்படைக்கப்பட்டது.
2. JBA நகர் மனைப்பிரிவுக்கு நகராட்சி பொறியாளரால் பரிந்துரைக்கப்பட்ட 10 மின்கம்பங்கள்

| | | |
|---|---|---|
| | அமைப்பதற்காக ரூ.2,71,350/−ஐ தமிழ் நாடு மின் வாரியத்திற்கு செலுத்தி, மின்வாரிய ரசீது எண். VMT 203 IA 2 D1 314 நாள் 14.02.2023ல் அசல் ரசீது ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.<br>3. JBA நகர் மனைப்பிரிவுக்காக நகராட்சிக்கு செலுத்த வேண்டிய மனைகள் பிரிக்க கட்டணம் ரூ. 7500/− கூராய்வு கட்டணம் ரூ.63,000/− உட்பிரிவு கட்டணம் ரூ.31500/− தொழிலாளர் நலநிதி ரூ.54130/− சேர்த்து ரூ.156130/−ஐ இந்நகராட்சி கருவூலத்தில் செலுத்தி ரசீது எண். 040/TM6/1/2022−23/0018313 நாள் 06.03.2023 ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.<br>4. JBA நகர் மனைப்பிரிவில் உரிமையாளரால் அமைக்கப்பட்ட அடிப்படை வசதிகளான தார்சாலைகள், வடிகால்கள், வடிகால் இணைப்பு, தெருவிளக்கு வசதிகள் குறித்து நகராட்சிப் பொறியாளரால் 13.03.2023 ல் நேராய்வு செய்யப்பட்டு, அறிக்கையாக 14.03.2023ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br>ஆகவே திருவண்ணாமலை நகரம் வார்டு எண்.4, பிளாக் எண்.10 நகரளவு எண்.362/8,10,11,12,15,17,19,20−ல் 2.32 ஏக்கர் பரப்பளவில் அமையப்பெற்றுள்ள JBA நகர் மனைப்பிரிவில் உள்ள குடியிருப்பு மனைகளுக்கு திருவண்ணாமலை, நகர் ஊரமைப்பு, உதவி இயக்குநரின், 05.01.20233ம் நாளிட்ட தொழில்நுட்ப அனுமதி SWP/DTP/TVMALAI District Layout No.07/23ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்க, மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :−</u>** மன்றம் அனுமதிக்கலாம்.<br>(கோப்பு எண்.251/2023/எப்2) | |
| **44** | திருவண்ணாமலை நகரம், வார்டு எண்.4, பிளாக் எண்.10 நகரளவு எண்.356/60−ல் 1.37 ஏக்கர் பரப்பினை AMA நகர் குடியிருப்பு மனைப்பிரிவு அமைப்பதற்காக திருவண்ணாமலை நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரின் ந.க.எண்.KCAV4RHW/2022/TCP நாள் 05.01.2023ல் இணையதளம் வழியாக, ஒற்றை சாளர முறையில் நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநரிடமிருந்து தொழில்நுட்ப அனுமதி (அனுமதி எண்.SWP/DTCP/TVMALAI District Layout No.09/2023) பெற்று, இதன் உரிமையாளர் JBA மெட்டல் கம்பெனி, நெ.56D முகல்புறாத் தெரு திருவண்ணாமலை அவர்களால் 18.01.2023ல் நகராட்சியின் இறுதி ஒப்புதல் வேண்டி விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது.<br>தொடர் நடவடிக்கையாக நகராட்சி பொறியாளர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோரிடம் இவ்வலுவலக ந.க.எண்.252/2023/எப்2 நாள் 03.02.2023ன் மூலம் திருவண்ணாமலை நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரின் தொழில்நுட்ப அனுமதியில் உள்ள நிபந்தனைகளை கூராய்வு செய்து அறிக்கை வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டது. | தீர்மானம் எண். 98<br>அனுமதிக்கப்பட்டது |

நகராட்சிப் பொறியாளர், நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோர்கள் 06.02.2023ல் சமர்ப்பித்த அறிக்கைகளின் அடிப்படையில் AMA நகர் மனைப்பிரிவு உரிமையாளருக்கு இவ்வலுவலக ந.க.எண்.252/2023/எப்2 நாள் 08.02.2023ல் கீழ்க்கண்ட அறிவிப்பு சார்வு செய்யப்பட்டது.

1. AMA நகர் மனைப்பிரிவுக்காக தான ஆவணம் 5602/2022 ன் மூலம் நகராட்சி ஆணையாளருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகள் மூலை முடக்குடன் மற்றும் பொது உபயோக இடங்களை உட்பிரிவு செய்து பட்டா மாற்றம் செய்து வருவாய் துறை ஆவணங்களை ஒப்படைக்க அறிவுறுத்தப்பட்டது.
2. AMA நகர் மனைப்பிரிவுக்காக சாலைகள், மழைநீர் வடிகால்வாய், சிறுபாலங்கள், தெருவிளக்கு வசதி, ஆகிய அடிப்படை வசதிகள் மேற்கொள்ள, நகராட்சி பொறியாளர் மதிப்பீட்டின்படி ரூ.35.00 லட்சம் நகராட்சி கருவூலத்தில் செலுத்த அறிவுறுத்தப்பட்டது.
3. AMA நகர் மனைப்பிரிவுக்காக, நகராட்சி பொறியாளரின் அறிக்கையில் குறிப்பிட்டபடி 8 மின்கம்பங்கள் அமைக்க தமிழ்நாடு மின்வாரியத்தில் கேட்பு பெற்று, அத்தொகையை செலுத்தி அதன் ரசீதை ஒப்படைக்க அறிவுறுத்தப்பட்டது.
4. AMA நகர் மனைப்பிரிவுக்காக, தனியார் நிலத்தை மனைகளாகவும், தெருக்களாகவும் பிரிக்க கட்டணம் ரூ.7500/- 39 மனைகளுக்கு கூராய்வு கட்டணமாக ரூ.39.000/- 39 மனைகளுக்கு உட்பிரிவு கட்டணமாக ரூ.19500/- தொழிலாளர் நல நிதிக்காக பொறியாளர் மதிப்பீட்டின்படி ரூ.28090/- ஆக மொத்தம் ரூ.94090/- ஐ நகராட்சி கருவூலத்தில் செலுத்த அறிவுறுத்தப்பட்டது.

AMA நகர் மனைப்பிரிவு உரிமையாளரால் 09.02.2023 நாளிட்ட மனுவில், இவ்வலுவலக அறிவிப்பு கடிதம் ந.க.எண்.252 / 2023 / எப்2 நாள் 08.02.2023ல் அறிவுறுத்தப்பட்ட அடிப்படை வசதிகள் பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.35.00 லட்சத்தை செலுத்துவதற்கு பதிலாக, அரசாணை நிலை எண்.141 (வீட்டுவசதி) நாள் 16.07.2022ல் உத்தரவிடப்பட்டுள்ளவாறு அடிப்படை வசதிகளை மனுதாரரின் நிறுவனத்தால் மேற்கொள்ள அனுமதி கோரப்பட்டது.

மனுதாரரின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு அரசாணை நிலை எண். 141 (வீட்டுவசதி) நாள் 16.07.2022ல் உத்திரவிடப்பட்டுள்ளவாறு கீழ்க்கண்ட நிபந்தனையுடன் இவ்வலுவலக ந.க.எண். 252/2023/எப்2 நாள் 15.02.2023ல் அனுமதி வழங்கப்பட்டது.

1. நகராட்சிப் பொறியாளரால் வழங்கப்பட்ட விரிவான மதிப்பீட்டின்படி, பொறியாளரை அணுகி ஆலோசனைகள் பெற்று நகராட்சி பொறியியல் பிரிவின் வழிகாட்டுதல்களின்படி பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

2. AMA நகர் மனைப்பிரிவில் 60% மனைகள் விற்கும் வரையிலோ அல்லது தொடர்ந்து ஐந்து ஆண்டு காலம் வரையிலோ, இதில் எது பின்னால் வருகிறதோ அதுவரை பராமரிப்புப் பணிகளை தங்கள் நிறுவனமே மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தி அனுமதி வழங்கப்பட்டது.

AMA நகர் உரிமையாளரால், அவரது 08.03.2023 நாளிட்ட கடிதம் மூலம் கீழ்க்கண்ட ஆவணங்கள் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டது.

1. AMA நகர் மனைப்பிரிவிற்காக தான ஆவணம் 5602 / 2022ன் மூலம் நகராட்சி ஆணையாளருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகள் மூலை முடக்குடன் 1583 ச.மீ. பொது உபயோக இடம் TNEB 22.20 ச.மீ. நகராட்சி இடம் 22.20 ச.மீ ஆகிய இடங்களை உட்பிரிவு செய்து நகராட்சி ஆணையாளர் பெயரில் பட்டா மாற்றம் செய்து வருவாய் வட்டாட்சியரின் 23.02.2023ம் நாளிட்ட ஆவணங்கள் அசலாக ஒப்படைக்கப்பட்டது.
2. AMA நகர் மனைப்பிரிவுக்கும், நகராட்சி பொறியாளரால் பரிந்துரைக்கப்பட்ட 8 மின்கம்பங்கள் அமைப்பதற்காக ரூ.2,17,080/-ஐ தமிழ் நாடு மின் வாரியத்திற்கு செலுத்தி, மின்வாரிய ரசீது எண். VMT 203 IA 2 D1 314 நாள் 14.02.2023ல் அசல் ரசீது ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.
3. AMA நகர் மனைப்பிரிவுக்காக நகராட்சிக்கு செலுத்த வேண்டிய மனைகள் பிரிக்க கட்டணம் ரூ.7500/- கூராய்வு கட்டணம் ரூ.39,000/- உட்பிரிவு கட்டணம் ரூ.19500/- தொழிலாளர் நலநிதி ரூ.28090/- சேர்த்து ரூ.94090/-ஐ இந்நகராட்சி கருவூலத்தில் செலுத்தி ரசீது எண். 040/TM6/1/2022-23/0018314 நாள் 06.03.2023 ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.
4. AMA நகர் மனைப்பிரிவில் உரிமையாளரால் அமைக்கப்பட்ட அடிப்படை வசதிகளான தார்சாலைகள், வடிகால்கள், வடிகால் இணைப்பு, தெருவிளக்கு வசதிகள் குறித்து நகராட்சிப் பொறியாளரால் 13.03.2023 ல் நேராய்வு செய்யப்பட்டு, அறிக்கையாக 14.03.2023ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆகவே திருவண்ணாமலை நகரம் வார்டு எண்.4, பிளாக் எண்.10 நகரளவு எண். 356/60-ல் 1.37 ஏக்கர் பரப்பளவில் அமையப்பெற்றுள்ள AMA நகர் மனைப்பிரிவில் உள்ள குடியிருப்பு மனைகளுக்கு திருவண்ணாமலை, நகர் ஊரமைப்பு, உதவி இயக்குநரின் 05.01.2023ம் நாளிட்ட தொழில்நுட்ப அனுமதி SWP/DTP/TVMALAI District Layout No.09/23ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்க, மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக்குறிப்பு :–</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(கோப்பு எண்.252/2023/எப்2) | |
| **45** | திருவண்ணாமலை நகராட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் கீழ்நாத்தூர் பகுதி சித்த மருத்துவமனை மற்றும் கனகராயன் தெரு பகுதி சித்த மருத்துவமனை ஆகிய இரண்டு மையங்களிலும் தினசரி பொது மக்களுக்கு மருந்துகள் மற்றும் மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகிறது. மையங்களின் பயன்பாட்டிற்கு தேவையான மருந்துகள் மற்றும் மாத்திரைகள் தற்போது இருப்பு இல்லாமையால் இம்மருந்துகளை அரசு அங்கீகாரம் பெற்றுள்ள IMPCOPS சென்னை என்ற நிறுவனத்தாரிடம் நேரடியாக வாங்கி பயன்படுத்திடவும், இவைக்கு ஆகும் தோராய செவினத் தொகை ரூ.3,00,000/–க்கு (ரூபாய் மூன்று லட்சத்திற்கு மட்டும்) மன்ற அனமதி கோரப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது மக்களின் பயன்பாட்டிற்கான மருந்து மற்றும் மாத்திரைகள் என்பதால் நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வாங்குவதற்கும் செலவினத் தொகைக்கும் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண்.4226/2021/எச்2) | தீர்மானம் எண். 99<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| **46** | இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளில் கொசுப்பழு ஒழிப்பு பணியாளர்கள் (DBC Workers) 120 நபர்கள் மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலமாக பணிபுரிந்து வந்தனர். இந்நிலையில் பணியின் போது விபத்துக்கள் அசம்பாவிதம் ஏதேனும் ஏற்பட்டால் அதற்கான இழப்பீடு நகராட்சியால் செலுத்தஇயலாத நிலை உள்ளதாலும், மகளிர் சுய உதவி குழுக்களின் மூலம் பணிபுரியும் போது காப்பீடு, தொழிலாளர் நல நிதி உள்ளிட்ட சட்ட முறையை பின்பற்றுவதில் நடைமுறை சிக்கல் எழுவதாலும், நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களையும் தனியார் மூலம் நிரப்ப (Out Sourcing) மேற்கொள்ள வேண்டியதன் அடிப்படையிலும், அரசு முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் அவர்களின் 24.10.2017 ஆம் தேதிய ஆய்வுக்கூட்ட அறிவுறுத்தலின்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.13433/2018/ஜே1 நாள் 17.09.2018ல் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சி நிர்வாக அனுமதி வரம்பிற்கு உட்பட்டு டெங்கு காய்ச்சல் கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை தனியார் மூலம் பணியமர்த்தி கொள்ளுமாறு (Out Sourcing) அனுமதி அளிக்கப்பட்டதின் அடிப்படையிலும், | தீர்மானம் எண். 100<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | இந்நகராட்சியின் 120 டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளில் கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை தனியார் மூலம் பணியமர்த்திக்கொள்ள மன்ற ஒப்புதல் பெறப்பட்டு, 18.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிக்கோரி **M/s.HMS** என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு, தொடர்ந்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், நகரமன்ற தீர்மான எண்.123 நாள் 10.06.2021ல் மன்ற அனுமதி பெறப்பட்டு, 31.10.2022 வரையான காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யப்பட்டு, தொடர்ந்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>தற்பொழுது அவர்களின் பணிக்காலம் 31.10.2022 உடன் நிறைவடைவதாலும், தற்போது ஒப்பந்தப்புள்ளி கோரி நடைமுறைப்படுத்துவதற்கு கால அவகாசம் தேவை என்பதாலும் 01.11.2022 முதல் 31.03.2023– ஆம் மாதம் வரை பொது சுகாதார அவசர அவசியம் கருதி டெங்கு நோய் தடுப்பு பணிகள் பாதிக்காதவாறு தொடர்ந்து இந்நிறுவனத்தார் முன்னர் அளித்த ஒப்பந்தப்புள்ளி அடிப்படையிலேயே மேற்கண்ட காலத்திற்கு **M/s.HMS** என்ற நிறுவனத்திற்கே பணி நீட்டிப்பு வழங்கிடவும் இவைக்காகும் தோராய செலவின தொகை ரூ. 60.00 இலட்சத்திற்கு (,அறுபது இலட்சம் மட்டும்) பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி M/s.HMS, ஜெயங்கொண்டம் என்ற நிறுவனத்திற்கு 01.11.2022 முதல் 31.03.2023 வரை காலத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம். எவ்வித முன் உரிமையும் நகராட்சியில் கோரப்படாது எனும் உறுதிமொழி ஒப்பந்த பத்திரம் தாக்கல் செய்து பழைய மாவட்ட ஆட்சித்தலைவரின் ஊதிய விகித்தில் அனைத்து பிடிப்புகளுடன் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.2692/2016/எச்1)** | |
| **47** | திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.274687/2022/சி4 நாள்21.12.2022ந் தேதிய கடிதத்தில், திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில் தீபத் திருவிழாவின்போது மாடவீதியில் தற்காலிக மின்விளக்கு ஏற்பாடு செய்தது மற்றும் கிரிவலப் பாதையில் ஜெனரேட்டர் வைத்ததற்காக பொதுப்பணி துறையினரால் பணி மேற்கொள்ளப்பட்டு, அதற்கான பட்டியல் தொகை ரூ.18,15,463/–ஐ Deepam Electrical Works, No.39A. Kosamada Street, Thiruvannamalai என்ற ஒப்பந்ததாரருக்கு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. | தீர்மானம் எண். **101**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. திருக்கார்த்திகை தீபத் திருவிழாவின் பொருட்டு செலவிடப்பட்ட தொகை ரூ.18,15,463/- மாவட்ட ஆட்சித் தலைவரால் பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்ததாரருக்கு அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில் இணை ஆணையரிடம் பெற்று வழங்க அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 796 /2022 /இ1) | |
| **48** | திருவண்ணாமலை நகராட்சியின் எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 39 வரையிலான தெருவிளக்குகளை பராமரிப்பு செய்வதற்கும் மற்றும் மின்சாதனப் பொருட்களை வாங்குவதற்கும் மார்ச்-2023 முதல் மே-2023 வரையிலான மாதத்திற்கு ஏற்படும் தோராய செலவினம் ரூ.9,90,000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. வருவாய் நிதியில் செலவினத்தை மேற்கொள்ளலாம்<br>(ந.க.எண். 3421 / 2021 / இ2) | தீர்மானம் எண். **102**<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| **49** | இந்நகராட்சியின் வருவாய் நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதிக்கான 2022-2023 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு மற்றும் 2023 - 2024 ஆம் நிதியாண்டிற்கான உத்தேச நிதிநிலை அறிக்கை தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 0517 / 2023 / பி2) | தீர்மானம் எண். **103**<br>அனுமதிக்கப்பட்டது |
| **50** | இந்நகராட்சி பயன்பாட்டிற்கு தேவையான 5 KVA UPS - 2 எண்ணிக்கை கொள்முதல் செய்ய, ELCOT, சென்னை - 32 என்ற அரசு நிறுவனத்திற்கு தொகை ரூ.3,39,845/-க்கான இந்தியன் வங்கி (காசோலை எண். 827467 நாள் 19.08.2021) அன்று தேதியில் அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி ELCOT, சென்னை-32 நிறுவனக் கடிதம் நாள் 07.10.2021-ல் மேற்கண்ட உபகரணங்களை தற்போது சப்ளை செய்ய இயலாத நிலை உள்ளதாகவும் அவசர அவசியத்தை பொறுத்து வேறு இடத்தில் வாங்கிக் கொள்ளவும் தெரிவிக்கப்பட்டது. தற்போது தொகை ரூ.3,39,845/- மேற்கண்ட நிறுவனத்தின் இருப்பில் உள்ளது. | தீர்மானம் எண். **104**<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |

இந்நிலையில் இந்நகராட்சி அலுவலர்கள் / பணியாளர்கள் பயன்பாடு மற்றும் காணொலி ஆய்வுக்கூட்டத்திற்கு தேவையான கீழ்க்கண்ட பொருட்கள் தேவைப்படுகிறது.

| வ. எண் | Item Code | தேவைப்படும் கணனி உபகரண பெயர் | எண்ணிக்கை | தொகை ரூ |
|---|---|---|---|---|
| 1 | 33447-A12-TV-009 | 55 inch LED Ultra HD (4K) Smart TV | 1 | 45900/- |
| 2 | 33447-A6-MFD 001 | Copier/Printer/Scanner & Network with 1 Year warranty | 2 | 33980/- |
| 3 | 33447-A1-DT-002 | i5 - Desktop Computer with 1 Year Warranty | 3 | 113700/- |
| 4 | 33447-A2-AIO-007 | 27 inch FHD - All in one Desktop-i7 PC Touch with one year warranty | 1 | 94200/- |
| | | Total | 7 | 287780/- |

மேற்கண்ட இருப்பில் உள்ள தொகை ரூ.3,39,845/- ல் தற்போது தேவைப்படும் கணினி உபகரணங்களை தொகை ரூ.287780/- மற்றும் GST உடன் வாங்கிக் கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. ஏற்கனவே உள்ள இருப்புத் தொகை ரூ.3,39,845/- ல் தற்போது தேவைப்படும் கணினி உபகரணங்களுக்கான தொகை ரூ.287780/- மற்றும் GST உடன் வாங்கிக் கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.0010/2019/சி1)

**51**

மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவண்ணாமலை அவர்களின் கடிதம் ந.க.எண்.அ6/296/2023 நாள் 09.02.2023ல் சட்டமன்ற உறுப்பினர் தொகதி மேம்பாட்டு திட்டம் 2022-23ல் 25 பணிகளுக்கு மதிப்பீடு ரூ.114.60 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நிர்வாக அனுமதியை தொடர்ந்து 14.03.2023 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது, பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண். **105**
அனுமதிக்கப்பட்டது

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் பெயர் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.1ல் உள்ள போளூர் ரோடு 7–வது தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 3.00 | Mr.S.Shanmugam | 0.11% குறைவு |
| | | | M/s.Sai baba construction | 0.79% அதிகம் |
| 2 | வார்டு எண்.2ல் உள்ள டாக்டர்.அம்பேத்கார் தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 3.00 | M/S.Linga Construction | 0.11% குறைவு |
| | | | M/S.APU Construction | 0.79% அதிகம் |
| 3 | வார்டு எண்.7ல் உள்ள பேகோபுரம் முதல் குறுக்குத் தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 3.00 | Mr.P.Iyappan | 0.14% குறைவு |
| | | | M/s.Om SakthiConstruction | 0.89% அதிகம் |
| 4 | வார்டு எண்.10ல் உள்ள செல்லநேரித் தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 3.00 | Tmt.S.Priya | 0.13% குறைவு |
| | | | Mr.L.Srinivasan | 0.89% அதிகம் |
| 5 | வார்டு எண்.12ல் உள்ள வடமாத்தாதி தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 3.00 | Mr.L.Srinivasan | 0.12% குறைவு |
| | | | Tmt.S.Priya | 0.89% அதிகம் |
| 6 | வார்டு எண்.18ல் உள்ள கல்லுக் குட்டைத் தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 3.00 | M/s.Sai Baba Construction | 0.12% குறைவு |
| | | | Mr.P.Iyappan | 0.89% அதிகம் |
| 7 | வார்டு எண்.25ல் உள்ள பெரும்பாக்கம் ரோடு இந்திரா நகருக்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 3.00 | Mr.P.Iyappan | 0.13% குறைவு |
| | | | Mr.P.Sekar | 0.89% அதிகம் |
| 8 | வார்டு எண்.26ல் உள்ள செங்கம் ரோடு 3–வது குறுக்குத் தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 3.00 | Mr.P.Iyappan | 0.13% குறைவு |
| | | | M/s.Om sakthiConstruction | 0.89% அதிகம் |
| 9 | வார்டு எண்.27ல் உள்ள எம்.கே.எஸ். தியேட்டர் குறுக்குத் தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 | M/s.Sri Sai Vijaya | 0.11% குறைவு |
| | | | Mr.P.Iyappan | 0.89% அதிகம் |
| 10 | வார்டு எண்.28ல் உள்ள தாமரை நகர் குறுக்குத் தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 3.00 | M/s.Sai Baba Construction | 0.14% குறைவு |
| | | | M/s.MKGR Construction | 0.88% அதிகம் |
| 11 | வார்டு எண்.31ல் உள்ள பட்டேல் அப்துல்ரசாக் தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 3.00 | M/s.Surya Construction | 0.10% குறைவு |
| | | | M/s.Madras Construction | 0.90% அதிகம் |
| 12 | வார்டு எண்.32ல் உள்ள தேனிமலை, முருகன் கோவில் தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 3.00 | Mr.K.Elumalai | 0.10% குறைவு |
| | | | M/s.MKGR Construction | 0.90% அதிகம் |
| 13 | வார்டு எண்.33ல் உள்ள அண்ணா நகர் 10–வது தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 3.00 | Mr.P.Iyappan | 0.10% குறைவு |
| | | | M/s.Om sakthi Construction | 0.90% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | வார்டு எண்.38ல் உள்ள அருணகிரிபுரம் 2–வது தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 4.00 | M/s.Gold Construction | 0.11% குறைவு |
| | | | Mr.C.Bala murali Krishnan | 0.90% அதிகம் |
| 15 | வார்டு எண்.39ல் உள்ள கணேசபுரம் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 | M/s.Gold Construction | 0.10% குறைவு |
| | | | Mr.C.Bala murali Krishnan | 0.90% அதிகம் |
| 16 | வார்டு எண்.3 பல்லவன் நகர், ஆதிதிராவிடர் காலனியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 | M/s.Srinivasa Construction | 0.12% குறைவு |
| | | | M/s.Linga Construction | 0.90% அதிகம் |
| 17 | வார்டு எண்.9 தியாகி அண்ணாமலை நகர், ஆதிதிராவிடர் காலனியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 | M/s.Gold Construction | 0.12% குறைவு |
| | | | M/s.Sai Baba Construction | 0.90% அதிகம் |
| 18 | வார்டு எண்.19 கீழ்நாத்தூர், ஆதிதிராவிடர் காலனியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 | M/s.Srinivasa Construction | 0.12% குறைவு |
| | | | M/s.Linga Construction | 0.90% அதிகம் |
| 19 | வார்டு எண்.22 சமுத்திரம், ஆதிதிராவிடர் காலனியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 | M/s.MKGR Construction | 0.14% குறைவு |
| | | | M/s.Sai baba Construction | 0.90% அதிகம் |
| 20 | வார்டு எண்.36 கல்நகர், ஆதிதிராவிடர் காலனியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 | M/s.Sai baba Construction | 0.10% குறைவு |
| | | | M/s.MKGR Construction | 0.90% அதிகம் |
| 21 | வார்டு எண்.39 கரியான் செட்டித் தெரு, ஆதிதிராவிடர் காலனியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 | Mr.P.Iyappan | 0.14% குறைவு |
| | | | Mr.P.Sekar | 0.99% அதிகம் |
| 22 | வார்டு எண்.23ல் உள்ள ராஜராஜன் தெருவிற்கு புதிய நியாய விலைக்கடை அமைத்தல். | 12.30 | M/s.Madras Construction | 0.09% குறைவு |
| | | | M/s.Surya Construction | 3.43% அதிகம் |
| 23 | வார்டு எண்.39 சாரோன், ஆதிதிராவிடர் காலனியில் புதிய நியாய விலைக்கடை அமைத்தல். | 12.30 | M/s.Gold Construction | 0.06% குறைவு |
| | | | Mr.C.Balamurali Krishnan | 3.37% அதிகம் |
| 24 | திருவண்ணாமலை தியாகி நா.அண்ணாமலை பிள்ளை மேல்நிலைப் பள்ளிக்கு தளவாட சாமான்கள் வழங்குதல் | 5.00 | Mr.P.Iyappan | 0.11% குறைவு |
| | | | Mr.P.Sekar | 1.51% அதிகம் |
| 25 | திருவண்ணாமலை நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு தளவாட சாமான்கள் வழங்குதல் | 5.00 | Mr.P.Iyappan | 0.11% குறைவு |
| | | | Mr.P.Sekar | 1.51% அதிகம் |

**அலுவலக குறிப்பு:** குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்
**(கோப்பு எண்.246/2023/இ1)**

| | | |
|---|---|---|
| **52** | பொது சுகாதாரப் பிரிவின் பயன்பாட்டில் உள்ள TN25 K 1240 என்ற வாகனத்தில் ஏறப்பட்டுள்ள பழுதுகளை சரி செய்திட ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.50,000/– (துருபாய் ஐம்பதாயிரத்திற்கு மட்டும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம், **(கோப்பு எண்.690/2023/எச்1)** | தீர்மானம் எண். 106 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 53 | திருவண்ணாமலை நகரின் எல்லைக்குட்பட்ட 39 வார்டுகளிலும் சேகரமாகும் திடக்கழிவுகளை தினந்தோறும் அகற்றிடும் வகையில் வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியாளர்கள் மற்றும் வாகனங்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி பணி மேற்கொள்வது குறித்த ஒப்பந்தப்புள்ளியினை 07.03.2023 ஆம் தேதியில் கோரிட நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களால் அனுமதியிடப்பட்டதை தொடர்ந்து இது குறித்த விள்மபரத்தினை இந்திய அளவில் ஒரு ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் ஒரு தமிழ் நாளிதழிலும் ஒரு நாள் விளம்பரம் செய்யப்பட்டது. இவ்விளம்பரம் செய்த Notice Adversiting Pvt. Ltd., சென்னை–600 014 என்ற விளம்பர நிறுவனத்தாரருக்கு செலவினத் தொகையாக ரூ. 57960/– யை வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி இப்பணி மேற்கொள்ளவும், உடன் இவைக்கான செலவினத் தொகையினையும் அனுமதிக்கலாம்.<br>**(கோப்பு எண்.3367/2022/எச்2)** | தீர்மானம் எண். 107<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 54 | இந்நகராட்சியின் பயன்படுத்தப்பட்டு வரும் கணினிகள் லேசர் பிரிண்டர்கள், லேப்டாப், UPS ஆகியவைகளை வருடாந்திர பராமரிப்பு (Auunal Maintenance) பணிகளுக்கான ஒப்பந்தம் 19.01.2023 உடன் முடிவடைந்து விட்டது. எனவே மேற்படி பராமரிப்பு பணிகள் மேலும் ஓராண்டிற்கு மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.3.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. அனுமதி வழங்கலாம்<br>2. வருவாய் நிதியிலிருந்து செலவிடலாம்<br>**(கோப்பு எண்.5699/2021/சி1)** | தீர்மானம் எண். 108<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

**ஆணையாளர்,**
**திருவண்ணாமலை நகராட்சி.**